DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | SC. 196/2024 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **வித்யா** |
| Huspand Name | : | கணேசன் |
| Village | : | ஈகலை |
| Taluk | : | தேவகோட்டை |
| Calling | : | House Wife |
| Religion | : | இந்து |
| Age | : | 44/2024 |

**(வழக்கின் எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.12.2024

**முதல் விசாரணை:**

நான் தற்போது காரைக்குடியில் குடியிருக்கிறேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் தேவகோட்டை ராம்நகர் 5 வது தெருவில் நான் குடியிருந்து வந்தேன். சாட்சி வீரபாண்டியன் எனது தகப்பனார். சாட்சி லட்சுமணன் எனது மாமனார். சாட்சி எனது பக்கத்து வீட்டில் குடியிருக்கிறவர். சாட்சி பஞ்வர்ணம் எனது நாத்தனார். கடந்த ஜனவரி 22.01.2022 ம் தேதியன்று எனது பெரியப்பா காசிநாதன் என்பவருடைய மகன் இறந்துபோனது சம்மந்தமாக மதியம் காளையார்கோவிலுக்க அருகில் உள்ள முடிக்கரை என்ற இடத்திலுள்ள எனது பெரியப்பா வீட்டிற்கு சென்றேன். நான் எனது பெரியப்பா வீட்டிற்கு செல்லும்போது எனது வீட்டில் படுக்கை அறையில் அருகில் உள்ள மரப்பீரோ மற்றும் ஸ்டீல் பீரோ அதன் அருகில் சின்ன பெட்டியும்

வைத்திருந்தேன். மரப்பீரோவில் எனது பள்ளி சான்றிதழ்கள், எனது மகன் மற்றும் மகளின் பிறப்புச்சான்றிதழ். என்னுடைய காளையார்கோவில் SBI வங்கியின் பாஸ்புத்தகம் மற்றும் தேவகோட்டை இந்தியன் வங்கியின் பாஸ்புத்தகம் மற்றும் என் கணவரின் தேவகோட்டை இந்தியன் வங்கி மற்றும் SBI வங்கியின் பாஸ்புத்தகம், இன்ஸ்சூரன்ஸ் புத்தகம், LIC புத்தகம் மற்றும் எனது மகன், மகள் மற்றும் என்னுடைய பாஸ்போர்ட்கள் மற்றும் சோழவந்தான், தேவிபட்டிணம் மற்றும் திருப்பத்தூர் ரோட்டிலுள்ள உள்ள சொத்துப்பத்திரம், கண்ணன்கோட்டை, காளையார்கோவில், கல்லூரி நகர், சென்னை ஆகிய இடங்களின் நிலப்பத்திரங்கள் மற்றும் நான் குடியிருக்கும் வீட்டின் நிலப்பத்திரம் மற்றும் 18 முதல் 20 பவுன் தங்க நகைகள் மற்றும் வெள்ளி கொலுசுகள், பணம் ரொக்கம் ரூ.2,80,000/- ஆகியவைகளை வைத்திருந்தேன். பணம் ரொக்கம் ரூ.2,80,000/- மற்றும் 18 முதல் 20 பவுன் தங்க நகைகளை இரும்பு பீரோ அருகில் உள்ள ஸ்டோரேஜ் பாக்சில் வைத்திருந்தேன். 25.01.2022 ம் தேதி அதிகாலை 3.30 மணியளவில் எனது நாத்தனார் பஞ்சவர்ணம் சென்னையிலிருந்து எனக்கு போன் மூலமாக எனது வீடு தீப்பிடித்து எரிவதாக எனக்கு தகவல் சொன்னார். எனது நாத்தனார் பஞ்சவர்ணத்திற்கு எனது மாமனார் தகவல் தெரிவித்தார். நான் வீட்டிற்கு சென்று பார்த்தபோது வீட்டில் உள்ள அனைத்து பொருட்களும் தீயில் எரிந்து சாம்பலாகியிருந்தது. நான் வருவதற்கு முன்பே தீயணைப்பு துறையினர் வந்து தீயை அணைத்து கேஸ் சிலிண்டரை அப்புறப்படுத்திவிட்டார்கள். எனது வீட்டின் மர மற்றும் ஸ்டீல் பீரோவில் வைத்திருந்த பொருட்களும் ஆவணங்களும் ஸ்டோரேஜ் பாக்சில் இருந்த பணம் மற்றும் நகைகளும் முற்றிலுமாக எரிந்து சாம்பலாகிவிட்டது. நான் வீட்டை

சுத்தம்செய்தபோது ஸ்டோரேஜ் பாக்சில் எரிந்து அப்படியே சரிந்துகிடந்தது. நான் ஸ்டோரேஜ் பாக்சை சுத்தம் செய்தபோது நான் வைத்திருந்த நகைகள் உருகி அதில் அப்படியே இருந்தது. நான் வைத்திருந்த பணம் முற்றிலுமாக எரிந்து விட்டது. பின்பு நான் இவ்வழக்கு சம்மந்தமாக நகர் காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் காவல்நிலையத்தில் கொடுத்தது தான். அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னிடம் திருட வந்தநபர் வீட்டில் எதுவும் கிடைக்காத ஆத்திரத்தில் வீட்டில் உள்ள பொருட்களை தீ வைத்தாக என்னிடம் சொன்னார்கள். நான் தேவகோட்டை நீதிமன்றத்திற்கு சென்றபோது எதிரியை இந்த வழக்கு சம்மந்தமாக பார்த்திருக்கிறேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வீட்டில் உள்ள அனைத்துபொருட்களும், நகை மற்றும் பணமும் தீயில் மொத்தம் எரிந்து சாம்பலாகியிருந்தது என்றும் திருடுபோகவில்லை என்றும் சொன்னால் சரிதான். நான் ஊருக்குபோன விசயத்தை யாருக்கும் சொல்லவில்லை என்றால் பக்கத்து வீ்டுக்கார பெண் கவிதாவிடம் சொல்லிவிட்டுபோனேன். நான் வரும்போது தீயணைப்பு துறையினர் வீட்டிற்குள் சென்று தீயை அனைத்தனர் என்றால் சரிதான். சம்பவத்தன்று போலிசார் நான் வருவதற்கு முன்பே இருந்தார்கள். நான் வந்தபிறகு கைரேகை நிபுணர்கள் வந்து தடயம் ஏதும் சேகரித்தார்களா என்றால் ஆமாம். நான் சம்பவத்தன்று காலை 4.20 மணிக்கு வந்தேன். எனது கைரேகையை நிபுணர் யாரும் வாங்கவில்லை. வந்தவர்கள் கைரேகை நிபுணர்கள் என்று போலிசார் சொன்னார்கள். போலிசார் மோப்பநாய்

உதவியுடன் எனது வீட்டை சோதனை செய்தார்களா என்றால் நான் வருவதற்கு முன்பு அவ்வாறு செய்ததாக கேள்விப்பட்டேன். நிலப்பத்திரங்கள் மற்றும் ஆவணங்கள் சம்மந்தமாக நீதிமன்ற வழக்குகள் இல்லை என்றால் இல்லை. எனது வீட்டில் தீப்பற்றி எரிந்தவுடன் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் சென்று பார்த்தார்கள் என்றால் ஆமாம் பார்த்துவிட்டு பூட்டு உடைந்திருக்கிறது என்று சொன்னார்கள். முதன்முதலில் கவிதா தான் வெளியே சென்று பார்த்தார். அவர் தீப்பிடித்ததை பார்த்ததாக 3.30 மணியளவில் சொன்னார். தீப்பிடித்து எரிந்துகொண்டிருக்கும்போது கேஸ் சிலிண்டரை அகற்றி கார்டன் சைடில் வைத்துவிட்டார்கள். அதை யார் வைத்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. நான் ஊருக்குபோன விபரம் யாருக்கும் தெரியாது என்றும் அதனால் உள்ளே திடீரென்று தீப்பற்றி எரியும் போது உள்ளே இருப்பவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் என்று அக்கம்பக்கத்தினர் கதவை உடைத்து உள்ளே சென்றனர் என்றால் சரியல்ல. நான் இரவில் கேஸ்சிலிண்டரை சரியாக ஆப் செய்யவில்லை என்றால் அப்படியல்ல. அதனால் தான் சிலிண்டரை ஆப் செய்து மாற்றிவைத்தார்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

A PASUMPON SHANMUGAIAH
Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2024.12.19 09:51:16 +0000

Chief Judicial Magistrate,
Sivagangai.